அ.வ.எண் - 166/2009
திரு. வேலு
20/09/2021
பி.வா.சா.3

**சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை**

சாட்சியம் சொல்ல நீதிமன்றததில இருந்து சம்மன் வரவில்லை. சாட்சி சொல்ல என்னை லட்சுமணன் மற்றும் நீலமேகம் அழைத்துவந்தார்கள். மேற்படி நபர்கள் அழைத்தன் பேரில் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான்சொல்லி தட்டச்சு செய்யப்பட்டதுதான். நான் குறிப்பிடும் லட்சுமணன் மற்றும் நீலமேகம் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு யாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தினேஷ்பாபு எனது சொந்த ஊர் பேரம்பாக்கம். என்னுடைய வீடு மேலான்டைதெருவில் உள்ளது. என் வீட்டின் சர்வே எண் தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் எனக்கு யார் சொன்னார்கள் என்றால் நான ்தான் சொன்னேன். எனக்கு இந்த விவரம் எவ்வறு தெரியும் என்றால் சாட்சி கையெழுத்து போட அழைத்தார்கள் சாட்சி கையெழுத்து போட்டேன் அதனால் தெரியும். அவ்வாறு எனில் பத்திரம் பதிவு செய்ததேதி பத்திர எண் போன்ற விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பத்திர எண் என்ன என்றால் தற்போது ஞாபகம் இல்லை. பிரமாண வாக்குமூலம் சுமார் 6 மாதத்திற்கு முன்பு தயார் செய்யப்பட்டது. பதிவுசெய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணத்தை பதிவுசெய்யும் போது பார்த்தேன் பின்பு துரை காண்பித்து அப்போதும் பார்த்தேன். 3 பிரதிவாதி துரை சொன்னதன் அடிப்படையில் தான் பத்திர எண் சர்வே எண் சொல்லியுள்ளேன் என்றும் எனவே தான் அவற்றை தற்போது என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. 1989க்கு முன்பே பன்னீர் செல்வம் குடி பழக்கத்திற்கு அடிமையாகி தனது மனைவியை அடித்து துரத்திவிட்டு தனியாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் வேலைக்கு போய் வரும் போது மட்டும் குடிக்கு பழக்கம் இருந்தது. பன்னீர் செல்வம் மனைவி பெயர் சிலோர்மணி என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ள பத்திரம் மோசடியானது என்றும் அந்த காலகட்டத்தில் சிலோர்மணி அந்த ஊரில் கிடையாது என்றால் சரியல்ல. அந்த பத்திரம் செய்யும் போது சிலோர்மணி ஊரில் இல்லை ன்றும் தாய் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. இந்த சொத்து பன்னீர் செல்வம் கிரையம் பெற்ற சொத்து கிடையாது என்றும் அரசாங்கம் அவருக்கு ஒப்படைப்பு செய்த சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை துரை கிரையம் பெறும்போது வாதி சுரேஷ் பாபு பிறக்கவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி

தன்னுடைய சாடசியத்தில் பத்திரம் பதிவு செய்யும் போது சுரேஷ்பாபுக்கு 6 அல்லது 7 வயது இருக்கும் என்று சொல்லியுள்ளர் என்றும் எனவே நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரிதான். பன்னீர்செல்வம் குடிபழக்கத்திற்கு ஆலாகி பிளேடினால் தனக்கு தானே ரத்த காயத்தை ஏற்படுத்திகொள்வார் என்றால் சரியல்ல. நாங்கள் கூட்டு சேர்ந்து மதுபோதைக்கு அடிமையான நபருக்கு குடிக்க பணம் கொடுத்து குடிக்கவைத்து மோசடியாக இந்த பத்திரத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 3ம் பிரதிவாதி சுவாதீணத்தில் இருந்ததாக சொல்வது எப்போது என்றால் பத்திரம் பதிவு செய்து மறு வாரத்தில் இருந்து துரை சுவாதீணத்தில் உள்ளார். அந்த வீட்டிற்கு குடிநீர் வசதி உள்ளது மின் இணைப்பு இல்லை. அவ்வாறு எனில் 1989 ல் இருந்து துரை அந்த வீட்டில் வசித்து வருவதாக சொல்கிறேன் என்றால சரிதான். பன்னீர் செல்வம் 1995 இறந்துவிட்டார் என்றால் எனக்குதெரியாது. அவர் இறக்கும்வரை அதே வீட்டில் தான் வசித்து வந்ததாக துரை சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் அப்பா அம்மாவுடன் வசித்தார். துரை என்பவர் தாவா சொத்தின் சுவாதீணத்தில் இல்லை என்றும் எனவே தான் அவர் 2009 ல் கேவியட் தாக்கல் செய்யும் போதும் அதன் பிறகும் பதில்உரையின் போதும் தாவா சொத்து காலி இடம் என்றும் சொல்லியுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் மோசடியான கிரையபத்திரத்திற்கு துணையாக இருந்துள்ளேன் என்றும் எனவே என்னுடைய சாட்சியம் ஏற்றுகொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**